MAY 2023 **P/ID 35315/PTL1E**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. மாணடி - பொருள் கூறுக,

2. மோப்பக் குழையும் மலர் எது?

3. யார் அரசருள் ஏறு?

4. மழலையின் இனிமை எத்தகையது?

5. நல்குரவு - பொருள் சுட்டுக.

6. கடன் என்ப நல்லவை எல்லாம் - கருத்துரைக்க.

7. ஆழி - பொருள் கூறுக.

8. அற்றம் என்றால் என்ன?

9. சூதின் விளைவு யாது?

10. காழில் கனி - பொருள் சுட்டுக.

11. ஊடுதல் என்றால் என்ன?

12. எதனின் மெல்லிது காமம்?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. ஐந்தவித்தல் என்றால் என்ன?

14. அறத்தால் வருவதே இன்பம் என்பதை வலியுறுத்துக.

15. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை - விளக்குக.

16. கனியிருப்பக் காய் கவரலாமா? விளக்கம் தருக.

17. அறிவுடையார் எல்லாம் உடையார் - விளக்குக.

18. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் என்று வள்ளுவம் கூறுவது யாது?

19. 'ஐம்புல இன்பமும் ஒண்தொடி கண்ணே உள' - விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. திருவள்ளுவ மாலையால் அறியலாகும் கருத்துகளைப் பட்டியலிடுக.

21. உளவியல் நுட்பம் சான்றதாகக் காமத்துப்பால் இயலுமாற்றை நிறுவுக.

22. எற்றிற்கு உரியர் கயவர் - விளக்குக.

23. திருக்குறளின் இலக்கிய மேன்மையைத் தெளிவுறுத்துக.

24. வள்ளுவம் வகுத்துரைக்கும் மானுட மதிப்புகளைப் பட்டியலிடுக.

———————